








We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்

# (CURRENT AFFAIRS)

## SEPTEMBER

*We Are Here..!! To Guide You..!!*









# We Shine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (CURRENT AFFAIRS)

## செப்டம்பர் - 06.09.2018

We Shine Academy™
guiding you to get through


Main Office @
**Weshine Study Circle**
Chromepet, Chennai
Phone: 8939144344, 8939244344

Branch Office @
**Weshine Study Circle**

A-90, 3rd Street (Near K3 Police Station),
Annanagar East
Chennai, Tamil Nadu 600102.

3rd Floor, West Wing, Gokul Arcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamilnadu 600020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்


- தமிழக நிகழ்வுகள்
- இந்திய நிகழ்வுகள்
- உலக நிகழ்வுகள்
- விளையாட்டு நிகழ்வுகள்
- விருதுகள்
- முக்கிய தினங்கள்










## தமிழக நிகழ்வுகள்

- மதுரை மாவட்டம் கொட்டாம்பட்டி அருகே குன்னங்குடிபட்டியில் பெருங்கற்கால கல்திட்டு, எண்கள் வட்டங்கள் ஆகியவை கண்டெடுக்கப்பட்டுள்ளன. சங்ககாலத்திற்கு சற்று முந்தைய காலம் 'பெருங்கற்காலம்' எனப்படுகிறது.
- **குறிப்பு**
  - திருவண்ணாமலையை அடுத்த செல்லங்குப்பம் கிராமத்தில் 11ம் நூற்றாண்டைச் சேர்ந்த செக்குக் கல்வெட்டு கண்டுபிடிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## இந்திய நிகழ்வுகள்

- **இந்தியா – வங்கதேசம்** எல்லைப் பாதுகாப்புப் படை தலைமை இயக்குநர்கள் அளவிலான உயர்நிலை பேச்சுவார்த்தை, டெல்லியில் செப்டம்பர் 03 முதல் செப்டம்பர் 08 வரை நடைபெறுகிறது.
  - இந்திய எல்லை பாதுகாப்பு படையின் தலைமை இயக்குநர் **கே.கே. சர்மா** தலைமையிலான 20 பேர் கொண்ட குழுவினரும், வங்கதேச எல்லைப் பாதுகாப்பு படை தலைமை இயக்குநர் ஷ∴பீனுல் இஸ்லாம் தலைமையிலான 13 பேர் குழுவினரும் இம்மாநாட்டில் பங்கேற்றுள்ளனர்.
- **குறிப்பு**
  - இந்தியா-வங்கதேசம் எல்லைப் படைகளின் தலைமை இயக்குநர் தலைமையிலான மாநாடு, 1975ம் ஆண்டிலிருந்து நடைபெறுகிறது. தற்போது நடைபெறுவது 47வது பேச்சுவார்த்தை ஆகும்.

- இந்தியப் பிரதமரால் 2015ம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட 'டிஜிட்டல் இந்தியா' பிரச்சாரத்தை ஊக்குவிப்பதற்காக, இராஜஸ்தான் மாநில அரசு **பாமஷா யோஜனா**-வின் கீழ் **(Bhamashah Yojana)** வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள (BPL – Below Poverty Line) பெண்கள் அனைவருக்கும் மொபைல் போன் வழங்க உள்ளது.
- **குறிப்பு:**
  - இராஜஸ்தான் மாநில அரசு, ஏற்கனவே 5000 கிராம

பஞ்சாயத்துக்கு இலவச **Wi-Fi** வழங்கியுள்ளது குறிப்பிடத்தக்கது.

## உலக நிகழ்வுகள்

- இந்தியக் குடியரசு தலைவர் **ராம்நாத் கோவிந்த் மற்றும் சைப்ரஸ்** நாட்டு அதிபர் நிகோஸ் அன்ஸ்டாசியாடிஸ் ஆகியோருக்கிடையே சட்ட விரோத பணப்பரிவர்த்தனைகள் தடுப்பு, சுற்றுச் சூழல் துறையில் ஒத்துழைப்பு ஆகிய இரு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகியுள்ளது.
- **குறிப்பு**
  - இந்தியாவில் அதிக முதலீடு செய்யும் **நாடுகளில் சைப்ரஸ் 8வது இடத்தில் உள்ளது குறிப்பிடத்தக்கது.**

- **KAZIND – 2018 - இந்தியா மற்றும் கஜகஸ்தான்** நாடுகளுக்கிடையேயான, பாதுகாப்பு துறைக்கான ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்கான, இரு நாடுகளின் இராணுவங்களிடையேயான போர் ஒத்திகை கஜகஸ்தான் நாட்டின் ஓடார் பகுதியில் செப்டம்பர் 10 முதல் செப்டம்பர் 23 வரை நடைபெற உள்ளது.
  - இப்போர் ஒத்திகையானது இரு நாடுகளின் இராணுவத்திற்கிடையேயான 3வது பதிப்பாகும்.
- குறிப்பு:
  - 2வது பதிப்பு கடந்த 2017 ஆம் ஆண்டு இந்தியாவில் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.

## விளையாட்டு நிகழ்வுகள்

- தென் கொரியாவில் உள்ள **சாங்வான் நகரில்** நடைபெற்று வரும் உலகக் கோப்பை துப்பாக்கிச் சுடுதல் போட்டியில் ஆடவருக்கான 50 மீட்டர் பிஸ்டல் பிரிவில் இந்தியாவின் **ஓம்பிரகாஷ் மிதர்வால்** தங்கப்பதக்கம் வென்றுள்ளார்.
  - செர்பியாவின் தமிர் மைக் என்பவர் வெள்ளிப் பதக்கத்தை வென்றுள்ளார்.
- **குறிப்பு**
  - பெண்கள் 10 மீட்டர் ஏர் ரைபிள் பிரிவில் இநதியாவின் அஞ்சும் முட்ஜில் வெள்ளிப்பதக்கம் வென்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

## விருதுகள்

- மனித நேய விழிப்புணர்வு ஏற்படுத்துவோருக்கான **‘ஆரோரா் பரிசு’** மியான்மர் நாட்டில் ரோஹிங்யா மக்களுக்காக போராடிய மனித நேய ஆர்வலர் **‘கியாவ் ஹலா ஆங்’** என்பவருக்கு வழங்கப்பட்டுள்ளது.
    - இப்பரிசு ஆர்மோனியா நாட்டினால் வழங்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

## முக்கிய தினங்கள்

- கப்பலோட்டிய தமிழன் **வ.உ.சிதம்பரம் பிள்ளை** பிறந்த நாள் - செப்டம்பர் 05
    - செக்கிழுத்த செம்மல் என்றும், கப்பலோட்டிய தமிழன் என்றும் அழைக்கப்பட்ட சிதம்பரம்பிள்ளை செப்டம்பர் 5, 1872ஆம் ஆண்டு ஓட்டப்பிடாரத்தில் பிறந்தார்.
- **குறிப்பு:**
    - வ.உ.சி. ஆங்கிலேயருக்கு எதிராக சுதேசி நாவாய்ச் சங்கம் என்னும் பெயரில் கப்பல் கம்பெனியைத் தொடங்கி, **‘காலிபா’, ‘லாவோ’** எனும் இரு கப்பல்களை தூத்துக்குடி மற்றும் கொழும்பு இடையே இயக்கினார்.

- **சர்வதேச தொண்டு தினம் - செப்டம்பர் 05 International Day of Charity.**
    - உலகளாவிய ரீதியில் தொண்டு தொடர்பான நடவடிக்கைகளுக்கு விழ்ப்புணர்வை ஏற்படுத்தும் விதமாக ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் 05-ஆம் தேதி உலக தொண்டு தினம் கடைபிடிக்கப்படுகிறது.
    - **சர்வதேச தொண்டு தினமானது 2012 முதல் ஐ.நா. பொதுச்சபையால் கடைபிடிக்கப்பட்டு வருகிறது.**